# பேருந்து பயணங்களை இனி iXiGO.com உடன் திட்டமிடுங்கள்

*இந்தியா முழுவதிலும் பேருந்து பயணங்களில் சிறந்த ஏற்பாடுகளை வழங்கும் முன்னணி பயண தேடு தளம்*

**புது டெல்லி, செப்டம்பர் 5, 2008 -** இந்தியாவின் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் இணையதள பயண தேடு தளமான iXiGO (www.ixigo.com) இன்று அதனுடைய பேருந்து தேடும் கருவியை இயக்கத்துக்கு கொண்டு வந்தது. இந்தியாவில் உள்ள பல்வேறு பேருந்து இயக்கும் நிறுவனங்கள் மற்றும் பேருந்து பதிவு தளங்களில் இருந்து பேருந்து பயணச்சீட்டுகளை தேட, ஒப்பிட மற்றும் பதிவு செய்ய இக்கருவி உதவுகிறது.

500-க்கும் மேற்பட்ட நகரங்களில் 2300 வழித்தடங்களில் இயங்கும் நூற்றுக்கணக்கான பேருந்து இயக்கும் நிறுவனங்களின் விவரங்களைத் தேட iXiGO-ன் பேருந்து தேடும் கருவி வழி செய்கிறது. குளிர் சாதன வாதி இல்லாததில் இருந்து தூங்கும் வசதியுள்ள சொகுசு பேருந்து மற்றும் குளிர்சாதன வசதியுள்ள வோல்வோக்கள் வரையிலான பேருந்துகளின் விவரங்களை iXiGO ஒப்பிட்டுக் காட்டுகிறது. நேரம், வசதிகள் மற்றும் கட்டண அடிப்படையில் பயணிகள் விவரம் தேட முடியும். iXiGO-ல் சிறந்த ஏற்பாட்டை பயனாளர் தேர்ந்தெடுத்தவுடன் பேருந்து பதிவு செய்யும் தளத்தின் பக்கம் திறக்கும். அங்கு பயணச்சீட்டுப் பதிவு நிறைவு செய்யப்படும்.

இந்தியாவின் முன்னணி பேருந்து பயணச்சீட்டு பதிவு செய்யும் தளங்களான Ticketvala, redBus மற்றும் TicketGoose உடன் iXiGO கூட்டாக செயல்பட்டு பேருந்து பயணச்சீட்டை இனையதளத்தில் பதிவு செய்ய உதவுகிறது. redBus-ன் முதன்மை நிர்வாக அலுவலர் ஃபனின்ட்ரா சாமா கூறினார் "இந்தியாவின் முன்னணி பயண தேடு தளத்துடன் இணைந்து செய்ல்படுவதில் நாங்கள் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். அவர்களுடைய 'மெடா-செர்ச்' தொழில்நுட்பம் எங்களின் பேருந்து பயணச்சீட்டு பதிவு செய்யும் திறன்களுக்கு மதிப்பு கூட்டுகிறது" "iXiGO-ன் உயர்தர தயாரிப்பு மற்றும் குழுவின் மீது நாங்கள் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறோம். இந்தியாவில் அவர்களுடைய பயணத்தின் ஒரு பகுதியாக பேருந்துகளைத் தேடுவதற்கு பயணிகளுக்கு நாங்கள் ஒன்றிணைந்து மேலும் வசதி செய்து தர முடியும்" என Ticketvala-ன் முதன்மை நிர்வாக அலுவலர் ஹரநாத் லோகநாதம்.மேலும் கூறினார்.

சேவையை துவக்கி வைத்து iXiGO-ன் நிறுவனர் & முதன்மை நிர்வாக அலுலவர் அலோக் பாஜ்பாய் கூறினார் "இணையதள பேருந்து பயணச்சீட்டு பதிவுக்கு மிகப் பெரும் வாய்ப்பு இருக்கிறது. நிறைய பேருந்து இயக்கும் நிறுவனங்களை சேர்க்கவும், இந்திய வாடிக்கையாளர்களுக்கு மேலும் முழுமையான மற்றும் பயன்படத்தக்க பேருந்து பயணச்சீட்டு தேடும் கருவியை வரும் காலத்தில் வழங்கவும் எங்கள் கூட்டாளிகளுடன் சேர்ந்து நாங்கள் செயல்படுவோம்.".

பல்வேறு பயண இணையதளங்களில் இருந்து ஒன்று திரட்டப்பட்ட பயண தகவல்களைத் தரும் iXiGO-ன் முன்னோடி அணுகுமுறையானது பயணிகள் மேலும் திறனுள்ள முறையிலும் முழுமையாகவும் தேடுவதன் மூலமாக நேரத்தையும் பணத்தையும் சேமிக்க வழிசெய்கிறது. அதன் கூட்டாளிகளைப் பொறுத்தவரையில், iXiGO-ன் வியாபார மாதிரியானது முனைப்பான பயணிகளை அடையாளம் காட்டுகிறது. முன்னதாக, இந்தியாவின் மிகப்பெரிய ஹோட்டல் பதிவு செய்வதற்கான தேடும் வசதியை iXiGO துவக்கியிருக்கிறது. இந்தத் தேடலில் 400-க்கும் மேற்பட்ட நகரங்களில் உள்ள 6000-க்கும் அதிகமான ஹோட்டல்கள் அடங்கும். இத்துடன், இந்தியாவின் மிக முழுமையான நேரடி பயணச்சீட்டு பதிவுக்கான உள்நாட்டு விமானக்கட்டண தேடலையும் அது துவக்கியிருக்கிறது. இணையதளத்தின் தேடல் பயன்பாடு மாதத்துக்கு மாதம் 20% அதிகமாகியிருக்கிறது. BAF Spectrum, சிங்கப்பூர் இதற்கு சமீபத்தில் நிதியுதவி தந்திருக்கிறது.

## iXiGO.com பற்றி:

iXiGO.com ® ஆனது கர்காவ்ன்-ல் இயங்கும் இந்தியாவின் முன்னணி இணையதள பயண தேடு தளம் ஆகும். இளம் ஐ. ஐ.டி. மற்றும் INSEAD MBA-க்களைக் கொண்ட தொழில்முனைவோர் குழுவால் ஜூன் 2007-ல் துவங்கப்பட்ட iXiGO.com ஆனது NASSCOM-ஆல் முதல் 100 புதுமையான ஆக்கங்களில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டு இருக்கிறது. iXiGO.com-ன் தனித்தன்மையான சந்தை அணுகுமுறை, தயாரிப்பின் பயன்பாட்டுத்தன்மை மற்றும் தீவிர ஈடுபாடு

கொண்ட நிர்வாகக் குழுவுக்காக பிஸினஸ் டுடே மற்றும் WSJ-Mint ஆகியன அதை இந்தியாவின் எழுச்சிமிக்க துவக்கங்களில் ஒன்றாகக் குறிப்பிட்டிருக்கின்றன. iXiGO.com பற்றிய மேலும் விவரங்களுக்கு www.ixigo.com பாருங்கள்.

**ஊடகத் தொடர்பாளர்**
Shudeep Majumdar
The Practice
மின்னஞ்சல்: shudeep@the-practice.net
அலைபேசி:+91 93502 68439